# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

29.08.2020 சனிக்கிழமை


## வாள்வெட்டு குழு சந்தேகத்தில் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக.29
வாள்வெட்டு மற்றும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகத்துக்கு இடமான நடமாட்டத்தை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுக்குக் குற்றச்

2

## தமிழரசு கட்சி மத்திய குழு மூடிய அறைக்குள் கூட்டம்

வவுனியா, ஓக.29
இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் இன்று வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள தனியார் விடுதியில் காலை 10.30 மணிக்கு ஆரம்பமானது.
தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் ஆரம்பமான இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கட்சியின் செயலாளர் துரைராசசிங்கம், மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மத்திய செயற்குழு கூட்ட அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.
மூடிய அறைக்குள் நடைபெறும் இந்தக் கூட்டம்

2

## ஜயசிங்கவுக்கு மீண்டும் பதவி?

கொழும்பு, ஓக.
பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் அநுருத்த ஜயசிங்கவை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதில் சிக்கல் இல்லை என அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பான நிலைப்

2



# வாயை அடக்காவிடில் ஓட ஓட விரட்டுவோம்

### மஹிந்த அணி கொழுப்புப் பேச்சு

கொழும்பு, ஓகஸ்ட் 29
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் எம்.பி. தனது வாயை உடனடியாக அடக்கி வாசிக்க வேண்டும். இல்லையேல் நாடாளுமன்றத்திலிருந்து அவரை ஓட ஓட வீட்டுக்கு விரட்டியடிப்போம்.

2

## மகளின் முறைப்பாட்டால் தடுப்பு காவலில் பெற்றோர்

### வவுனியாவில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக.29
பெற்றோர் தன்னைத் துன்புறுத்துகின்றனர் என்று சிறுமி ஒருவர் கொடுத்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் பெற்றோரை இன்று கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம்

2

## நீதி கோரும் போராட்டத்தில் அனைவரும் கைகோருங்கள்

### காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக.29
காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகளின் வருகையை எதிர்பார்த்து 10 ஆண்டுகளாகக் காத்திருந்த பலர் தங்கள் உறவுகளைக் காணாமலேயே உயிரிழந்துள்ளனர். போர் முடிந்து இத்தனை ஆண்டுகள் கடந்துள்ளபோதும், எமக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. நீதிக்கான

2

## அதிக பணப் பரிமாற்றம் வடக்கில் 6 பேர் கைது!

முல்லைத்தீவு, ஓக.29
வங்கிக்கணக்கின் ஊடாக அதிகளவான பணப்பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்ததன் அடிப்படையில் சந்தேகத்தின் அடிப்படையில் வடக்கில் ஆறு பேர் இதுவரை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது. யாழ்ப்பா ணத்தில் இருவரும், முல்லைத்தீவில் இருவரும், வவு னியாவில் இருவரும் கைது

2

## புதினம் தெரியுமோ?

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த கையோட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் தொடங்கின புகைச்சல் இப்ப உச்சக் கட்டத்தை எட்டியிருக்குப் பாருங்கோ. கஜேந்திரர்கள் கூட்டணி மணிவண்ணனைக் கட்சியில இருந்து நீக்கிறதுக்கு முடிவு எடுத்திருக்கினம் என்டது தான் இப்பத்தையான் நிலைமை.
சுமுகமாக மணி

2

## தனிமைப்படுத்தலில் இருந்த பெண் ஓட்டம்

கொழும்பு, ஓக.29
அளுத்கம சுற்றுலா விடுதியொன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பின்னர், நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வெளிநாட்டுப் பெண் ஒருவர் நேற்றுத் தப்பியோடியுள்ளார். ஆஸ்திரேலி

2

## 5½ கிலோ தங்கத்துடன் வடக்கில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக.29
வடக்குக் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் சுமார் 7 கோடி ரூபா பெறுமதியான 5 அரைக் கிலோ தங்கம் இன்று அதிகாலை கைப்பற்றப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

2

# வாயை அடக்காவிடில்...

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் முதல் இனமும் முதல் மொழியும் சிங்களம். அதேவேளை, முதல் மதம் பௌத்தம். மற்ற இனங்களும், மொழிகளும், மதங்களும் இரண்டாம் பிரிவைச் சார்ந்தவையாகும். இதை விக்னேஸ்வரன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதையும் மீறி அவர் நாடாளுமன்றத்தில் ஊளையிட்டால் அவரை சபையிலிருந்து வெளியேற்றுவோம்; ஓட ஓட வீட்டுக்கு விரட்டியடிப்போம். தமிழ் அரசியல்வாதிகள் வடக்கில் ஊளையிடலாம். ஆனால், அதியுயர் சபையான நாடாளுமன்றத்தில் ஊளையிட்டால் எந்தப் பயனும் அவர்களுக்குக் கிடைக்காது. முதலமைச்சராகப் பதவி வகித்து வடக்கு மாகாணத்தை நாசமாக்கிய விக்னேஸ்வரன், இனவாதத்தையும் மொழிவாதத்தையும் மதவாதத்தையும் வைத்து அரசியல் நடத்தலாம் என்ற நோக்குடன் தற்போது நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளார். அவரின் இலக்குகள் எதுவும் எம்மை மீறி நாடாளுமன்றத்தில் நிறைவேறாது -என்றார்.
(எ-22)

## தமிழரசு கட்சி...

பெறும் இந்தக் கூட்டம் பிற்பகல் 6 மணிக்குப் பின்னரே முடிவடையும் என்று தெரிய வருகின்றது. அதன்பின்னரே கூட்டத்தில் ஆராயப்பட்ட விவரங்கள் தெரியவரும்.
எனினும் சுமந்திரன் துரைராசசிங்கம் கூட்டணி மேற்கொண்ட தேசியப்பட்டியல் ஆசன நியமனம் தொடர்பாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் விவகாரம் தொடர்பாகவும் காரசாரமான விவாதங்கள் கூட்டத்தில் நடைபெற்றது என்று அறிய முடிந்தது. (எ)

## மகளின் முறைப்பாட்டால்...

வவுனியாவில் நடந்துள்ளது. செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவுக்குட்ட கிராமம் ஒன்றில் வசிக்கும் 17 வயதுச் சிறுமியே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார். இந்த மாணவி தன்னைப் பெற்றோர் துன்புறுத்துகின்றனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதையடுத்து பொலிஸார் மாணவியை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.
இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட செட்டிக்குளம் பொலிஸார், மாணவியின் முறைப்பாட்டுக்கு அமைய பெற்றோரைக் கைது செய்து பொலிஸ் தடுப்புக் காவ லில் வைத்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் வவுனியா மாவட்ட நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-18)

## புதினம் தெரியுமோ?

வண்ணனைக் கட்சியில இருந்து ஒதுக்கிப் பிறகு பார்த்துக் கொள்ளுவம் எண்டுதான் கஜேந்திரர்கள் கூட்டணி முதலில காய் நகர்த்தியது. மணிவண்ணன் பேச்சாளர் பதவியையும் விட மாட்டன், அமைப்பாளர் பதவியையும் விடமாட்டான் என்று முரண்டு பிடிச்சப் பிறகு மணியைக் கட்சியில இருந்து தூக்கிறது எண்ட கறார் முடிவுக்கு வந்திட்டினம் கஜேந்திரர்கள். நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இருக்கிறதால அடுத்த 5 வருசத்தில சில, பல வேலையளைச் செய்து மக்கள் ஆதரவைக் கூட்டலாம் எண்டு நம்பிற கஜேந்திரர்கள் கூட்டணி, அதனால மணியைக் கழட்டி விடுறதில பெரிசா ஒண்டும் யோசிக்கவில்லை எண்டினம் கட்சியல இருக்கிறவை. கஜேந்திரகுமார் யாழ்ப்பாணத்திலும், கஜேந்திரன் வன்னியிலையும் கவனம் செலுத்தப் போறதால, மணி விவகாரம் பெரிசா தாக்கம் செலுத்தாது எண்டும் கட்சித் தலைமை யோசிக்குதாம். அதோட மணியை கட்சிக்குள்ள வைச்சிருந்தால் மணியோட பலரும் சத்தம் பெரிசாப் போடும் எண்டும் கட்சித் தலைமை யோசிக்குதாம். மாகாண சபைத் தேர்தல் நடக்க இருக்கிறதால மணி அந்த நேரத்தில் ஏதும் பிரச்சினையை ஏற்படுத்தலாம் எண்ட பயமும் கஜேந்திரர்கள் கூட்டணிக்கு உள்ளுக்க இருக்கு. அதனால் கட்சியில இருந்து மணியைத் தூக்கினால், அங்க இங்க சத்தம் போடுற உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் முதல் கட்சித் தொண்டர்கள் எல்லாரை யும் ஒரு புனர்வாழ்வு குடுத்து தங்கட பக்கம் திருப்பலாம் எண்டும் கஜேந்திரர்கள் கூட்டணி திட்டமிட்டிருக்கினமாம். அதனால என்ன காரணம் சொல்லி எண்டாலும் மணியைக் கட்சியில இருந்து தூக்கிற முடிவிலதான் கஜேந்திரர்கள் கூட்டணி இருக்கினம். அதனால அடுத்து வாற நாள்களில சுவாரசியமான சம்பவங்கள் ஏதும் நடக்கலாம். இது இந்தப் பக்கம் நடக்க அங்கால இன்னொரு சம்பவமும் நடந்து கொண்டிருக்குக் கண்டியலே. வழமையா மீனுக்குத்தான் வலை வீசுவினம். இங்க மீன் வலை வீசிக்கொண்டிருக்கு எண்டா பாருங்கோவன். வேற யாருக்கு மணிக்குத்தான். மணி சிக்குமா எண்டு பொறுத்திருந்து பாப்பம். – பட்சி

## நீதி கோரும் போராட்டத்தில்....

எமது போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் இணைந்து எமக்கு ஆதரவளிக்க வேண்டும்.
இவ்வாறு அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் இணைப்பாளர் த.செல்வராணி தெரிவித்தார்.
இன்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளைத் தேடிவந்த 72க்கும் அதிகமானவர்கள் தங்கள் உறவுகளைக் காணாமலேயே உயிரிழந்துள்ளனர். உயிருடன் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை சர்வதேசம் எங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நாளை போராட்டம் ஒன்றை வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளவுள்ளனர். இந்தப் போராட்டத்தை குழப்புவதற்காக சில தரப்பினர் முயற்சிக்கிறார்கள். இந்தப் போராட்டங்களில் அனைத்துத் தரப்பினரும் கலந்துகொள்ள வேண்டும். தங்களது பிள்ளைகள், தங்களது உறவுகளைத் தொலைத்த அனைவரும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும்.
என்றார். (எ-22)

## ஜயசிங்கவுக்கு...

பாட்டை எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்குமாறு சட்டமா அதிபருக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.
யாழ். புங்குடுதீவில் மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் குற்றவாளியான சுவிஸ் குமார் என்றழைக்கப்படும் மகாலிங்கம் சிவகுமார் என்பவருக்கு உதவி புரிந்த குற்றச்சாட்டில், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் அநுருத்த ஜயசிங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் அவர் தற்போது பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.
அரசியல் பழிவாங்கும் நோக்கில் தாம் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று லலித் அநுருத்த ஜயசிங்க, அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.
ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையான லலித் அநுருத்த ஜயசிங்க, தன்னை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான பணிப்புரையை விடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.
தமது சேவை பெறுநர் ஓய்வு பெறுவதற்கு 11 மாதங்களே எஞ்சியுள்ளது என்று சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் அநுருத்த ஜயசிங்க சார்பில் ஆணைக்குழுவில் முன்னிலையான சட்டத்தரணி மகேஸ் கொட்டுவெல்ல குறிப்பிட்டார்.
இந்தக் கோரிக்கை தொடர்பான நிலைப்பாடு எதிர்வரும் 31 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் உபாலி அபேரத்ன அறிவித்துள்ளார்.
இந்த விடயம் தொடர்பான சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை வினவியபோது, இது தொடர்பாக ஆராய வேண்டும் என சட்ட மா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ரொஹாந்த அபேசூரிய குறிப்பிட்டார்.
வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கொலை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட நியோமால் ரங்கஜீவவை, பொலிஸ் இன்ஸ்பெக்டராக மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ள முடியுமாயின், அநுருத்த ஜயசிங்க தொடர்பிலும் அவ்வாறானதொரு தீர்மானத்தை மேற்கொள்வதில் காணப்படும் சிக்கல் என்ன? என இதன்போது ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் கோரியுள்ளார்.
இதேவேளை, பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹனவை எதிர்வரும் 31 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.
பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் கே.கே.கே குணசேகர இதற்கு முன்னர் ஆணைக்குழுவில் வழங்கிய சாட்சியம் தொடர்பில் அஜித் ரோஹனவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(எஇ)

## வாள்வெட்டு குழு...

செயல்களுடன் இவர்களுக்குத் தொடர்புள்ளதா என்பது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.(எ26)

## தனிமைப்படுத்தலில்....

யாவைச் சேர்ந்த 80 வயதுடைய பெண் ஒருவரே தப்பியோடியுள்ளார். இந்தப் பெண் மன நோய்க்கு உட்பட்டமைக்கான அறிகுறிகளை வெளிக்காட்டியமையால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்றுக் காலை 7.30 மணியளவில் அவருக்கு மருந்து வழங்கத் தாதி ஒருவர் தேடியபோது, அந்தப் பெண் தப்பியோடியமை கண்டுபிடிக்கப்பட்டது. அதேவேளை, அந்தப் பெண்ணுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், அந்தப் பரிசோதனை அறிக்கைகள் இன்னமும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தப்பியோடிய பெண்ணை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எஇ)

## 5½ கிலோ...

அனலைதீவு, காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்துச் சந்தேகத்துக்கு இடமான படகொன்றைச் சோதனையிட்டபோதே தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது. படகில் பயணித்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
கைதுசெய்யப்பட்ட இருவரும் மாதகலைச் சேர்ந்தவர்கள் என்றும், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் என்று கடற்படைத் தகவல்கள் தெரிவித்தன.(எ26)

## அதிக பணப் பரிமாற்றம்....

செய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் பெண் ஒருவரும், வணிகர் ஒருவரும் நேற்றுப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வெளிநாடுகளில் இருந்து அதிக பணம் அனுப்பப்பட்டுள்ளதை அடுத்தே இந்தக் கைது நடவடிக்கைகள் நடந்துள்ளன என்று முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இவர்கள் அனைவரும் அவர்களது பிரிவுகளில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டு, விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-19)

# கிராம அலுவலர் மாற்றலுக்கு எதிராக மக்கள் போராட்டம்

கொழும்பு, ஓக.29

வவுனியா, இராசேந்திரகுளம் கிராம அலுவலரை இடம்மாற்ற வேண்டாம் என்று தெரிவித்து அந்தப் பகுதி மக்களால் இன்று போராட்டம் ஒன்று மேற் கொள்ளப்பட்டது.

இராசேந்திரங்குளம் கிராம சேவையாளர் அலுவலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எமது பகுதிக்கான கிராமசேவையாளர், எமக்கு சிறப்பான சேவைகளை ஆற்றி யுள்ளார். எனவே அவரை வேறுபகுதிக்கு இடமாற்றம் செய்யவேண்டாம். மீண்டும் எமது கிராமத்திற்கே நியமிக்க வேண்டும் என்று போராட்டத் தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்த னர். அந்தப் பகுதிக்குச் சென்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்



குழுத் தலைவரும், நாடாளு மன்ற உறுப்பினருமான கு. திலீபன் பொதுமக்களுடன் கலந்துரையாடியதுடன், வவு னியா பிரதேச செயலாளருட னும் தொலைபேசியில் கலந்து ரையாடினார்.

கிராம சேவையாளரை இடமாற் றம் செய்வதை இடைநிறுத்துவ தாக நாடாளுமன்ற உறுப்பின ரால் வாக்குறுதி வழங்கப்பட்ட



கிளிநொச்சி மாவட்ட மாற்றுத்திறனாளி கள் சங்கத்தின் ஒழுங்கமைப்பில், சுவிஸ் ஆதாரம் அமைப்பின் நிதி அனுசரணை யில் நேற்றுமுன்தினம் பத்து மாற்றுதிற னாளிகளுக்கு ஊன்றுகோல்கள் வழங்கப் பட்டன. கண்டாவளைப் பிரதேச மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் வேண்டுகோ ளுக்கு இணங்கவே இந்த ஊன்றுகோள் கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ந-21)

## யாழ்ப்பாணத்தில் மாட்டு வண்டில் சவாரி

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கொத்து தரவை சவாரித்திடலில் நாளை ஞாயிற் றுக்கிழமை யாழ்.மாவட்ட சவாரிச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் மாபெரும் மாட்டு வண்டி சவாரிப்போட்டி நடை பெறவுள்ளது.

இங்கு அ,ஆ,இ,ஈ,உ என்ற ஐந்து பிரிவு களில் போட்டி நடத்தப்படுவதுடன் பிற்பகல் 1.30 மணிக்கு "உ" பிரிவுக்கான பதிவுகள் நிறுத்தப்படும் எனவும் ஏற்பாட் டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந-21)

## நவகமுவ பகுதியில் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஓக.29

நவகமுவ பகுதியில் பொலிஸாரிடமிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட சந்தேகநபர் ஒருவர் நேற்று இரவு சுட்டுக் கொல்லப்பட் டுள்ளார். இந்தச் சம்பவத்தில் இந்துநில் வஜிர குமார எனும் சந்தேகநபரே இவ்வாறு சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேகநபர் கொலை,கொள்ளை, கப்பம் பெறல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் சாட்டுக்களில் தேடப்பட்டு வந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இவர் நவகமுவ பகுதியில் வைத்து, 10 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் பொலிஸாரால் கைதுசெய் யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(றி)



திருகோணமலை ரோட்டறி கழகத்தினால், திருகோண மலை மாவட்ட பாடசாலைகளுக்கு கைகள் கழுவும் தொட்டிகள் வழங்கப்பட்டன. பாடசாலை மாணவர்க ளின் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மேற்கொள் ளப்பட்டுவரும் இத் திட்டத்திற்கான அனுசரணையை கண்டி ரோட்டறி கழகம் மற்றும் கொழும்பு நீகனெக் ஸன் ரோட்டறி கழகம் ஆகியன இணைந்து வழங்கியுள் ளன. (ந)

## இடியுடன் கூடிய மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஓக.29

மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்களி லும் மற்றும் அம்பாறை, மட்டக்களப்பு முல்லைத்தீவு மாவட்டங்களில் சில இடங் களிலும் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தி யம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களி லும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் காணப்படும்.

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புக ளிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளி லும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப் படுகின்றது.

மன்னாரிலிருந்து புத்தளம் வரையான கடற்பரப்புகளும் அம்பாந்தோட்டையிலி ருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புக ளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ற)

## வெருகலம்பதியானின் வேல் தாங்கிய பாதயாத்திரை

திருகோணமலை, ஓக.29

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க வெருகல், வெருகலம் பதியானின் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு திருக்கோ ணேஸ்வரப் பெருமான் கோவிலில் இருந்து மூதூர் வெருகலம்பதி சித்திர வேலாயுதசு வாமி கோவிலிற்கு வேல்தாங்கிய பாதயாத் திரை முன்னெடுக்கப்பட வுள்ளது. திருகோ ணமலை உப்புவெளி சோலைபைரவ ஆலய பாதயாத்திரைக் குழுவினரால் இப் பாதயாத் திரை முன்னெ டுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு திருக்கோணேஸ்வரர் கோவி லில் இருந்து ஆரம்பமாகும் பாதயாத்திரை திருகோணமலை, மூதூர், ஈச்சிலம்பற்று பகுதியில் உள்ள கோவில்களைத் தரிசித்து வழிபட்டு 7ஆம் திகதி திங்கட்கிழமை அன்று இரவு வெருகலம் பதியைச் சென்ற டையும். (ந-40)

## மருத்துவமனையில் சிகிச்சைபெற்ற சிறுமி தப்பி ஓட்டம்

சாவகச்சேரி, ஓக.29

சாவகச்சேரி மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில். சிகிச்சைபெற்ற 15 வயது சிறுமி வைத்திய சாலையிலிருந்து தப்பித்துள்ளார். இந்தச் சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

தனிப்பட்ட காரணங்களுக்காக நஞ்சு அருந்திய இச் சிறுமியை அவரது உறவினர்கள் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற சிறுமி, அதிகா லையில் மலகூடம் செல்வதாகக் கூறிச் சென்றுள் ளார். நீண்ட நேரமாகியும் அவர் வெளியே வராத தால் அங்குள்ள உத்தியோகத்தர்கள் சென்று பார்த் தபோது. அங்கு அவரைக் காணவில்லை.

சிறுமி ஜன்னல் வழியாக குதித்து தப்பியோடியிருக் கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மருத்துவ மனை பணியாளர்கள், பாதுகாப்பு உத்தியோகத் தர்கள் இணைந்து தேடியும் அவரைக் காணாததால் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-9)

# தொண்டைமானாறு பாலத்தினூடாக போக்குவரத்துக்கு நேற்று முதல் அனுமதி

யாழ்ப்பாணம், ஓக.29



வலிகாமம் கிழக்கு ஊடாக சந்நிதி ஆலயத்துக்கு செல்லும் பக்தர்களின் வசதிகருதி தொண்டைமானாறு பாலம் ஊடான போக்குவரத்து நேற்று முதல் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், கொரோனா விழிப்புணர்வுக்கு மக்கள் ஒத்துழைத்து செயற்படவேண்டும் என பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

பாலத்தினூடாக மக்களைப் போக்குவரத்திற்கு அனுமதிக்கும் வழிபாடுகளுடன் கூடிய சம்பிரதாய நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு பாலத்தின் நுழைவாயிலில் தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப் பாலத்தினூடான போக்குவரத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை வருடாவருடம் வலிகிழக்கு பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது. இம்முறை கொரோனா முன்னெச்சரிக்கை நடைமுறைகளுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட் டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கு இணங்க மட்டுப்படுத்தப் பட்டளவிலான பக்தர்களின் எண்ணிக்கை, நேர வரையறைகள் என்பன சுகாதார விதிமுறைகளைக் கருத்திற்கொண்டு கடைப்பிடிக்கப்படும்.

போக்குவரத்து பாலத்தின் பகுதிகள் உரிய நேர அவகாசத்தில் தொற்று நீக்கம் செய்யப் படும். மக்கள் பாலத்தினுடாக பயணிக்கையில் தம்மை அடையாளப்படுத்தி உரிய பதிவுகளுக்கு உட்படுத்திய பின்னரே ஆலயத்தை அடைய வேண்டும். பாலப் பகுதியில் கடமையில் ஈடுபட்டுள்ளவர்களின் வழிநடத்துதலையும் அறிவிப்புக்களையும் முழுமையாகப் பின்பற்றி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ந-20)

# தொழில் இழந்த 4 லட்சம் பேர் தொடர்பிலும் கவனம் வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஓக.29

அரசாங்கம் 1,50,000 பேருக்கு தொழில் வழங்கும்போது 4 இலட்சம் பேரின் தொழில் இல்லாமலாக் கப்பட்டிருக்கின்றது. இவர்கள் தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இடைக்கால கணக்கறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இன, மத பேதங்கள் கடந்து நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு நாம் ஒரு நாடாக முகங் கொடுக்க வேண்டும். அவ்வாறு முகங்கொடுக்க வேண்டுமென்றால் நாம் உண்மை மற்றும் யதார்த் தத்தைப் பற்றி நன்கு புரிந்துக்கொள்ள வேண்டும். உண்மையான யதார்த்தம் என்னவென்றால் கொவிட் தாக்கம் காரணமாக 4 லட்சம் பேர் வேலைவாய்ப்புக்களை இழந்துள்ளனர். வசதி குறைந்த குடும்பங்க ளில் ஒரு இலட்சம் பேருக்கும், ஐம்பதாயிரம் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பு களை வழங்குவது மிகவும் நன்மையானது. ஒன்றரை லட்சம் பேருக்கு தொழில் வழங்கும்போது மறுபுறம் 4 லட்சம் பேருக்கு தொழில் இல்லாது போயுள்ளது. அதற்கு அப்பால் பலர் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மக்களுக்காகச் செய்யப்பட்ட பல அபிவிருத்தித்திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன இவை தொடர்பாகவும் அரசாங்கம் கவனம் செலுத் தவேண்டும் - என்றார். (ஐ-இ)

# துப்பாக்கிகளுடன் இருவர் கைது

கொழும்பு, ஓக.29

யக்கலமுல்ல எல்ல இகல மற்றும் கல்கந்த பகுதிகளில் துப்பாக்கிகளுடன் இரண்டு சந்தேகநபர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யக்கலமுல்ல பொலிஸாருக்குக் கிடைப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து குறித்த பகுதியில் திடீர் சுற்றிவளைப்பினை மேற் கொண்ட போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 32 மற்றும் 45 வயதுடையவர்களாவர். இவர்களிடமிருந்து போரா 12 வகைத் துப் பாக்கிகள் இரண்டும், தோட் டாக்கள் இரண்டும் பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)





மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் பயிலுநர் பயிற்சி வழங்குவதற்கான நியமனக் கடிதங்கள் நேற்று வழங்கப்பட்டன. பிரதேச செயலகத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச செயலாளர், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.திவாகரன் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ந-15)

# சம்பிக்க ரணவக்கவின் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.29

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் அவரின் சாரதி துஷித திலும் குமார, உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுதத் அஸ்மடல்ல ஆகியோருக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்தி வைக்கக் கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப் பட்ட இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதி பதி கிஹான் குலதுங்க முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. இதன்போது எதிர்வரும் 17 ஆம் திகதி விசார ணையை ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார். நேற்றைய வழக்கு விசாரணையின்போது மூன்று பிரதிவாதி களும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

கொழும்பு இராஜகிரிய பகுதி யில் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி வாகனத்தை செலுத்தி விபத்து ஏற்படுத்தி யமை, விபத்து தொடர்பான வழக்கில் பொய் சாட்சியத்தை உருவாக்கியமை உள்ளிட்ட 16 குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்க ளுக்கு நதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# வங்கிகளில் முறைகேடுகள்: மக்கள் தகவல் வழங்கலாம்

கொழும்பு, ஓக. 29

நல்லாட்சி அரசாங்கத்தின் போது நான்கு அரச வங்கிகளில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளது. 2015 - 2019 காலப்பகுதியில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் அதனுடன் இணைந்த நிதி நிறுவனங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் ஆராய்வதற்காக நான்கு உறுப்பினர்களைக்கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக இக்காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள், இந்த நிறுவனங்களின் நோக்கத்துக்கு எதிரான செயற்பாடுகள் மற்றும் பயனற்ற கணக்கு வழக்குகள் தொடர்பான தகவல்களை பொது மக்கள் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்க முடியும்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக இது தொடர்பான தகவல்களை , பணிப்பாளர் நாயகம் ,அரச பொது நிறுவன திணைக்களம், நிதி அமைச்சு செயலகம் , கொழும்பு 05 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு ஆணைக்குழு பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.(ஐ-இ)

# மருந்துகள் விலைகுறைப்பு அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, ஓக. 29

சில மருந்து வகைகளின் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என ஔடத உற்பத்தி விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். எதிர்வரும் மாதங்களில் சில மருந்து வகைகளின் விலை குறைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். இதுவரை நாட்டில் உற்பத்தி செய்யப்படாத பல மருந்துகளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# குடும்ப அதிகாரத்தை பலப்படுத்தவே 19ஐ நீக்க முயற்சிக்கின்றனர்

## எம்.பி ஹர்ஷன ராஜகருணா தெரிவிப்பு

கொழும்பு, ஒக.29



இடைக்கால கணக்கறிக் கையில் ராஜபக்ஷாகளின் குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு மாத்திரம் 38 சதவீத நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அவர்களின் குடும்ப அதிகாரத்தை மேலும் பலப்படுத்தவே 19 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தை நீக்க முயற்சிக்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஒரு அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொடுத்தால் அது சிக்கலை ஏற்படுத்தும் என்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கடந்தகால ஆட்சியின் போது உறுதியாகியிருந்தது. இந்த நிலைமை மீண்டும் தோற்றம் பெறுமா? என்ற அச்சம் தற்போது ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ராஜபக்ஷாகளின் குடும்ப ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ,அதனைப் பலப்படுத்துவதற்காகவும் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நீக்க முயற்சித்து வருகின்றனர்.

ஆளும் தரப்பைச் சேர்ந்த நிபுணர் குழுக்கள் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நீக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்து வருகின்ற போதிலும் , அரசாங்கம் அதனை நீக்கும் எண்ணத்திலேயே இருக்கின்றது.

இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்களுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என்ற சட்டம் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பசில் ராஜபக்ஷ அமெரிக்க பிரஜை என்பதினால் , அவருக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனை கருத்திற் கொண்டே 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நீக்க முயற்சித்து வருகின்றார்கள்.

இதேவேளை அமைச்சு நியமனங்களுக்கும் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தமது தரப்பைச் சேர்ந்த பலருக்கு மேலும் அமைச்சுகளை பெற்றுக் கொடுக்க வேண்டியிருப்பதாலே அதனை நீக்க முயற்சிக்கின்றனர்- என்றார். (ஐ)

# பிளாஸ்ரிக் இறக்குமதிக்கு தடை

## சுற்றாடல் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 29

பிளாஸ்டிக் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றமையை அரசு தடை செய்யவுள்ளது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்தப் பொருள்களை தடை செய்வதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தடை செய்யப்பட வேண்டிய பொருள்களில் பிளாஸ்டிக் கோப்பைகள், பிளாஸ்டிக் கரண்டிகள் மற்றும் பல பொருள்கள் உள்ளன. இவை தவிர சில அலுமினியப் பொருள்கள் மற்றும் பொலித்தீன் பொருள்கள் என்பனவற்றை இறக்குமதி செய்யவும் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (த, இ)

# கரையோரத்தை தூய்மைப்படுத்த பாதுகாப்புக் குழு

மட்டக்களப்பு, ஒக.29

கரையோரப் பிரதேசங்களில் சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பிரதேச கரையோரப் பாதுகாப்பு குழு நிறுவப்பட்டுள்ளது. இக் குழுவானது மட்டக்களப்பு மாநகர முதல்வர் தலைமையில் நிறுவப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் கரையோர வலயங்களில் இடம்பெறும் சுற்றாடல் மாசடைவினைக் கட்டுப்படுத்தி, எதிர்கால சந்ததியினருக்கு சுத்தமான நாட்டினைக் கையளிக்கும் தூரநோக்கோடு இக்குழுவானது செயற்படவுள்ளது என மட்டக்களப்பு மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார். (ற)

# வன அழிப்பு; வர்த்தகர் கைது



புத்தளம், ஒக.29

ஆனைவிழுந்தான் பாதுகாக்கப்பட்ட வனத்தின் ஒரு பகுதியை இயந்திரம் மூலம் அழிப்பதற்கு ஆலோசனை வழங்கிய குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். குறித்த வனப்பகுதியை இயந்திர வாகனம் ஒன்றின் ஊடாக அழித்த சந்தேகநபரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணையை அடுத்தே இவ் வர்த்தகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையில் அழிவை எதிர்நோக்கிய தேசிய ரீதியான அரியவகை உயிரினங்கள் மற்றும் விசேட பறவை இனங்களை இந்த வனப்பகுதியில் காண முடியும் இத்தகைய பல சிறப்பி யல்புகள் கொண்ட ஆனைவிழுந்தான் வனப்பகுதியின் ஒரு பகுதியை அழிவுக்கு ஏற்படுத்தியுள்ளமை கவலையளிக்கின்றது என சூழலியலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஐ)

# சட்டவிரோத பொருள்களுடன் கைதானவர் சிறைக் காவலர் சங்கத்தின் தலைவர்

கொழும்பு, ஒக.29

சட்டவிரோத பொருள்களை வெலிக்கடை சிறைச்சாலைக்கு கொண்டு சென்றபோது கைதானவர் சிறைக் காவலர் சங்கத்தின் தலைவர் என்று தெரிவிக்கப்படுகிறது. கைதானவர் ரூபா ஒரு மில்லியன் மதிப்புள்ள ஹெரோய்ன், மொபைல் போன்கள் மற்றும் பல சட்டவிரோத பொருள்களுடன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பேலியகொட குற்றத் தடுப்புபிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

மேலும் அவரது வீட்டில் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லத் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த ஹெரோய்ன் போதைப் பொருள்கள் மீட்கப்பட் டுள்ளன. சிறையிலுள்ள ஹைப்ரிட் சூடா என்ற போதைப்பொருள் வியாபாரிக்கு ஹெரோய்ன் கொடுக்கத் தயாராக இருந்தேன் எனத் தெரிவித்துள்ள அவர், ஹைப்ரிட் சூடா என்ற கடத்தல்காரனின் அடியாளால் தனக்கு ஹெரோய்ன் வழங்கப்பட்டதாகவும், அதை எடுத்து ஹைப்ரிட் சூடாவிடம் ஒப்படைத்த பின்னர் 60,000 ரூபா பெற இருந்ததாகவும் சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் தற்போது சிறைச்சாலையில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதால் ஹெரோய்னை சிறைச்சாலைக்கு கொண்டுசெல்லாது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். குறித்த நபர் தடைசெய்யப்பட்ட பொருட்களை சிறைச்சாலைக்கு ஏறக்குறைய ஒரு வருடமாக எடுத்துச்சென்று கைதிகளிடம் ஒப்படைத்து பெரும் தொகையை சம்பாதித்துள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-இ)

# பெண் யாசகர் தாக்கியதில் வயோதிப யாசகர் உயிரிழப்பு

அநுராதபுரம், ஒக.29

அநுராதபுரம் ரயில் நிலை யத்துக்கு அருகிலுள்ள ரயில் குறுக்கு வீதிக்கு அருகில் வைத்து பெண் யாசகர் ஒருவர், வயோதிப யாசகர் ஒருவரைத் தாக்கியதில் அந்த வயோதிப யாசகர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுபோதையிலிருந்த வயோதிப யாசகர், குறித்த பெண் யாசகருடன் கருத்து முரண்பாட்டில் ஈடுபட்ட போது, அந்தப் பெண் யாசகர் தனது பாதணியால் அவரைத் தாக்கியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கீழே விழுந்து வயோதிப யாசகர் உயிரிழந்துள்ளார். அநுராதபுரம் பகுதியை சேரந்த 62 வயதுடைய யாசகரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ற-இ)


# சபையில் விக்கியை கிண்டலடித்த விமல்

கொழும்பு, ஒக. 29

இனவாதம் பேசியவாறு சி.வி.விக்கினேஸ்வரன், சிங்கள அரசினூடாகவே ஓய்வூதியம் பெறுகிறார் என்று கிண்டலாகத் தெரிவித்துள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ச. இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர்,

மூவின மாணவர்களும் பாடசாலை செல்கின்றனர். சடலங்களை புதைப்பதா? தகனம் செய்வதா? என்று பாராது மக்களுக்கு மத்தியில் கொரோனா பரவாமல் தடுத்தது குறித்து சிந்திக்க வேண்டும்.- என்றார். (த)

# குடிசையில் இருந்து கோபுரத்துக்கு உயர்ந்தவர் வசந்தகுமார்



கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த காங்கிரஸ் எம்.பி வசந்தகுமார் நேற்று மாலை காலமானார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1950ஆம் ஆண்டு பிறந்தவர் வசந்தகுமார்.

பட்டப்படிப்பு முடித்து சென்னைக்கு வேலை தேடி வந்த வசந்தகுமார், 1970களில் விஜிபி நிறுவனத்தில் விற்பனையாளராக பணியாற்றினார். சுயதொழில் தொடங்க வேண்டும் என்பதே இவரது நோக்கமாக இருந்தது. மீண்டும் தொழிலாளி ஆகக்கூடாது, முதலாளியாக வேண்டும் என்பதில் அவர் உறுதி யாக இருந்தார். 1978ஆம் ஆண்டில் 'வசந்த அண்ட் கோ' என்ற பெயரில் மின்சாதன பொருள்கள் மற்றும் வீட்டு உபயோக பொருள்கள் விற்பனை செய்யும் கடையை சென்னையில் அவர் ஆரம்பித்தார்.

"தொழில் தொடங்கிய நேரத்தில் என்னிடம் ஒரு ரூபாய் கூட இல்லை. உழைத்து எப்படியாவது முன்னேற வேண்டும் என்ற ஆசை மட்டுமே இருந்தது. ஆனால், யாரிடமும் வேலை செய்யக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன்" என தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் வசந்தகுமார் தெரிவித்திருந்தார்.

தனது நண்பர் நடத்தாமல் ஒரு கடையை மூடி வைத்திருக்க, அந்தக் கடையை இவர் சுத்தம் செய்து நடத்த ஆரம்பித்தார். தனக்கு எதிர் கடைக்கு வெளியே இருந்த ஒரு பலகையில் தானே 'வசந்த் அண்ட் கோ' என்று எழுதி மாட்டிக்கொண்டதாக அவர் ஒரு பேட்டியில் கூறியிருப்பார்.

**1970களிலேயே மாத தவணை திட்டம் அறிமுகப்படுத்தியவர்**

மாத தவணையில் அனைத்து வீட்டு உப யோகப்பொருள்கள் விற்கும் திட்டத்தை தொடங்கி யது, 'வசந்த் அண்ட் கோ'வின் மிகப்பெரிய வெற் றிக்கு முக்கிய காரமணாக அமைந்தது எனலாம். முதன்முதலில் நாற்காலி தயாரிக்கும் தனது நண்பரி டம் இருந்து நாற்காலியை வாங்கி அதனை விற்கத் தொடங்கினார் வசந்தகுமார்.

"25 ரூபாய்க்கு இரண்டு மூன்று நாற்காலி வாங்கி அதனை 30 ரூபாய்க்கு விற்றுவிடுவேன். ஆனால், சிலரிடம் காசு இருக்காது. 15 ரூபாய்தான் இருக்கி றது என்பார்கள். அதனால் அவர்களிடம் 15 ரூபாய்க்கு நாற்காலியை கொடுத்துவிட்டு, மீதமுள்ள 15 ரூபாயை, தினமும் ஒவ்வொரு ரூபாயாக கொடுக்க சொல்வேன். கடன் கொடுத்ததற்காக ஒரு ரூபாய் அதிகம் பெற்றுகொள்வேன்" என்று வசந்தகுமார் தெரிவித்திருந்தார். தமிழகத்தில் மாதத்தவணையில் வீட்டு உபயோகப் பொருட்களை விற்பனை செய்து வந்த வசந்த் அண்ட் கோ மிக விரைவிலேயே பெரிய அளவில் பிரபலமானது. தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளம் ஆகிய மாநிலங்களில் மொத்தம் 60க்கும் அதிகமான கிளைகள் கொண்டுள்ளன. வசந்த் தொலைக்காட் சியை 2008 ஆம் ஆண்டில் தொடங்கி நடத்தி வருகி றார். இவர் எழுதிய "வெற்றிப்படிக்கட்டு" என்ற சுயசரிதை புத்தகத்தை நடிகர் ரஜினிகாந்தும், அவ ரது மனைவி லதா ரஜினி காந்தும் வெளியிட்டனர்.

# கொரோனாவுக்கு பிடித்த குளிர்காலம் வருகிறது!



மற்ற எந்த வைர.ையும் போலவே கொவிட்19 வைரஸூம், குளிர்காலத்தில் தான் வேகமாக பரவும் என்கின்றனர் தொற்று நோயியல் வல்லுநர் கள்.

குளிர் காலத்தில், பொது இடங்களின் மேற்பரப் பில் கொரோனா வைரஸ் அதிக நேரம் தொற்றும் தன்மையுடனும், பல்கிப் பெருகும் திறனுடனும் இருக்கும் என்பது மருத்துவர் ரீதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது.சீனாவில், வுஹான் பகுதி யில் கொரோனா பரவத் தொடங்கியது 2019 டிசெம்பரில் தான் என்பதை வல்லு நர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.


அடுத்து, ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் தான் கொரோனா வைரஸ் வேகமாக பரவியது.எனவே, கைகளை சோப்பு போட்டு அடிக்கடி கழுவுவது, முக கவசம் அணிவது, பொது இடங்களில் சமூக இடைவெளி விட்டு புழங்குவது என்ற அறிவுறைகளை இன்னும் அதிகரிக்க வேண்டும் என மருத்துவர்கள் தெரிவித்துள் ளனர். தற்போது தளர்வுகள் ஏற்பட்டு வருகின்றன. குளிர்காலமும் நெருங்கி வருகிறது. அதற்குள் நம்பகமான தடுப்பூசிகள் நம்மை நெருங்கிவிட்டால், தெம் பாக வெளியே வரலாம் என மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.




# விரைவில்

மோகன்ராஜா இயக்கத்தில், ஜெயம் ரவி, நயன் தாரா, அரவிந்த்சாமி மற்றும் பலர் நடித்து 2015ஆம் ஆண்டு வெளி வந்த படம் 'தனி ஒருவன்'. ரீமேக் படங்களையே இயக்கி வந்த மோகன்ராஜா முதல் முறையாக சொந்தமாகக் கதை எழுதி இயக்கிய படம் இது. ஒரு தரமான படமாக அமைந்த இந்தப் படம் தனி முத்திரையைப் பதித்து பெரிய வெற்றியைப் பெற்றது.

இந்தப் படத்தின் இரண்டாம் பாகத்தை எடுக்க வேண்டுமென இயக்குநர் மோகன்ராஜாவுக்கு பலரும் வேண்டுகோள் விடுத்து வந்தனர். அதைத் தொடர்ந்து அவரும் அதற்கான வேலைகளில் இறங்கி னார். தற்போது அதற்கான கதையை அவர் முழுவதும் எழுதிவிட்டதாகத் தெரிகிறது. விரைவில் படத்தின் அறிவிப்பை வெளியிட உள்ளோம் எனவும் தெரிவித் துள்ளார்.



# ஒல்லி வீடு

படத்தில் நீங்கள் பார்ப்பது வீட்டின் முன்பக்க சுவர் அல்ல. 1,122 சதுர அடியில், இரண்டு படுக்கையறைகளு டன் கட்டப்பட்ட முழுமையான வீடு!

அமெரிக்காவின் இலினாய்ஸ் மாகாணத்தில் உள்ளது டீர்ஃபீல்டு என்ற கிராமம். அங்கே அமைந்துள்ள இந்த வீடு உள்ளூர் மக்களிடையே வெகு பிரபலம். 'ஸ்லிம் ஹவுஸ்' என்று சொன்னாலே போதும், அங்குள்ள குழந்தைக்குக் கூட தெரியும். இப்போது விற்பனைக்கு வந்திருக்கிறது ஸ்லிம் ஹவுஸ். இதன் விலை சுமார் ரூ.2 கோடி.

வீட்டு புரோக்கர் ஒருவர் ஸ்லிம் ஹவுஸை வீடியோ எடுத்து டுவிட்ட ரில் தட்டிவிட, வைரலாகிவிட்டது. 'இந்த வீட்டுக்குள் எப்படி வசிக்க முடியும்' என்பதே ஆயிரக்கணக்கா னோரின் கமெண்ட். ஆனால், வீடியோவில் காட்டப்படும் வீட்டின் உட்புறம் வசிப்பதற்கு ஏற்றதா கத்தான் இருக்கிறது. ஏசி உட்பட அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள் ளன. வீட்டுத்

**தளபாடங்களை எல்லாம் வீட்டுக்குள் எப்படி கொண்டு போனார்கள்?!**

# சென்னை சூப்பர் கிங்ஸ்: 13 பேருக்குக் கொரோனா

டுபாய், ஓக.29

ஐ.பி.எல் தொடரில் விளையாட சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கடந்த 21 ஆம் திகதி தங்களது ஒட்டுமொத்த அணியுடனும் டுபாய் சென்றது.



ஆறு நாள்கள் தனிமைப்படுத்தப் பட்ட பிறகு பயிற்சியை ஆரம் பிக்கலாம் என்று எதிர்பார்க்கப் பட்ட நிலையில் தற்போது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகத்தில் 13 பேருக்கு கொரோனா கண்டறியப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் சென்னை அணி மேலும் ஒரு வாரத்துக்கு அதா வது செப்ரெம்பர் 1 ஆம் திகதி வரை தனிமைப்படுத்தப்பட முடிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் யார் யார் கொரோனா வில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறித்த அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை.

இது தொடர்பில் சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்வாகி தெரிவித்த தாவது,

சென்னை அணியில் இடம் பெற்றிருக்கக் கூடிய இந்திய வீரர் ஒருவருக்கும், மூத்த நிர்வாகி ஒருவருக்கும் கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் எத்தனை பேருக்கு கொரோ னாத் தொற்று பாதித்தது என்று எனக்கு முழுமையாகத் தெரி யாது. முழுத்தகவலும் கிடைத்த பின்னர் நான் உங்களுக்கு தெரி விக்கிறேன் -என்றார். (ற)

## விருதுக்கான பரிசுத்தொகை அதிகரிப்பு

புதுடில்லி, ஓக.29

விளையாட்டு விருதுகளுக்கான பரி சுத்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது என மத்திய விளையாட்டுத்துறை மந்திரி கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

மேஜர் தயான் சந்தின் பிறந்தநாளை யொட்டி டெல்லி மேஜர் தயான் சந்த் தேசிய விளையாட்டரங்கிலுள்ள அவரது சிலைக்கு மத்திய விளை யாட் டுத்துறை மந்திரி கிரண் ரிஜிஜு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, விளையாட்டு மற்றும் சாகச விருதுகளுக்கான பரிசுத் தொகையை அதிகரிக்க முடிவு செய்துள்ளோம் என கூறினார்.

அர்ஜுனா விருதுக்கான பரிசுத் தொகை 15 இலட்சமாகவும், கேல் ரத்னா விரு துக்கான பரிசுத்தொகை 25 இலட்சமா கவும் உயர்த்தப்பட்டுள்ளது என்று விளையாட்டுத்துறை மந்திரி தெரிவித் துள்ளார்.

தேசிய விளையாட்டு தினத்தை யொட்டி தேசிய விளையாட்டு மற் றும் சாகசங்களுக்கான விருது வழங் கும் நிகழ்ச்சி இன்று காணொலி வாயிலாக நடைபெறவுள்ளது. விருது களை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் வழங்கவுள்ளார். (ற)

## விலகினார் ரெய்னா



புதுடில்லி, ஓக.29

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடரில் சுரேஷ் ரெய்னா பங்கேற்கமாட்டார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

ஐ.பி.எல் தொடரில் பங்கேற்பதற்காக சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சென்றுள்ள நிலையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர்கள் குழாம் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட் டிருந்தனர்.

இதனையடுத்து, அணியின் வீரர்கள் சிலர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள் ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டிருந் தது.

இந்த நிலையில், தனிப்பட்ட காரணங்க ளுக்காக ஐ.பி.எல் போட்டித் தொடரில் இருந்து விலகுவதாக சுரேஷ் ரெய்னா அறிவித்துள்ளார்.

இதனை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகக் குழு, தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தின் மூலம் உறுதிப்படுத் தியுள்ளது.

164 ஐ.பி.எல் போட்டிகளில் விளை யாடியுள்ள சுரேஷ் ரெய்னா, 4 ஆயிரத்து 527 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

சுரேஷ் ரெய்னா ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகுவது, சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு பாரிய பாதிப்பை ஏற்ப டுத்தும். (ற)

## சம்பியனானது சீ.ஆர்.சீ கழகம்

சாவகச்சேரி, ஓக.30

தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட் டுக் கழகங்களுக்கிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விளையாட்டு விழாவில், சீ.ஆர்.சீ விளையாட்டுக் கழகம் சம்பிய னானது.

இந்த விளையாட்டு விழாவானது பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில், மட்டு வில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சாவகச்சேரி சீ.ஆர்.சீ. விளையாட்டுக் கழகம் 17 தங்கப் பதக்கங்களை வென்று இந்த வருடத்தின் பிரதேச சம்பியனாகி யது. 10 தங்கப்பதக்கங்களை வென்று கச்சாய் கலைமகள் விளையாட்டுக் கழகம் இரண்டா வது இடத்தையும், 9 தங்கப் பதக்கங்களை வென்று மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் மூன்றாமிடத்தையும் கைப்பற் றின.

இந்த விழாவுக்கு முதன்மை விருந்தி னராக மாகாண விளை யாடுத் திணைக்களப் பணிப்பா ளர் முகுந்தன் சிறப்பு விருந்தின ராக மாவட்ட விளையாட்டு அலுவலர் விஜிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-9)



## கொரோனாவின் பிடியில் மல்யுத்த வீராங்கனை

புதுடில்லி, ஓக.29

இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். வினேஷ் போகத் ஆசிய மற்றும் கொமன்வெல்த் போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்தவர். ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற் கத் தகுதிபெற்றுள்ளார்.

இந்த ஆண்டுக்கான கேல் ரத்னா விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட அவர், சோன்பேட் நகரிலுள்ள தனது கிராமத்தில் பயிற்சியாளர் ஓம் பிரகாஷ் தலைமையில் பயிற்சி மேற் கொண்டு வந்துள்ளார். தேசிய விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்வதற்கு முன் அவருக்கு கொரோனாப் பரிசோ தனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகள் நேற்று வெளிவந்தன. இதில் போகத்துக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக போகத் மேலும் கூறுகையில்,

விருது வழங்கும் விழாவுக்கான ஒத்திகைக்கு முன் சோன்பேட் நகரில் கொரோனாப் பரிசோதனை நடந்தது. இதில் எனக்கு கொரோனா பாதிப்பு இருப்பது உறுதியானது. நான் வீட்டி லேயே என்னை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன். ஆனால் எனக்கு கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் இதுவரை இல்லை. நான் நன்றாகவே இருக்கிறேன். விரைவில் நலம் பெறுவேன் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்துள்ளார். (ற)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 28.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.